**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,**
**ந.க.எண். 1591 /அ1/2023 நாள் : 05.10.2023**

பொருள் : பள்ளிக் கல்வி– வேலூர் மாவட்டம் – அனைத்து அரசு / ஆதிதிராவிடர் நல / நகரவை, உயர் மற்றும் மேனிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், அனைத்து வட்டாக் கல்வி அலுவலர்கள் (BEO), வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் (BRT) ஆகியோருக்கான கூட்டம் – தொடர்பாக

அனைத்து அரசு / ஆதிதிராவிடர் நல / நகரவை, உயர் மற்றும் மேனிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், அனைத்து வட்டாக் கல்வி அலுவலர்கள் (BEO), வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் (BRT) ஆகியோருக்கான கூட்டம் நாளை ( 06.10.2023) அன்று காலை 10.30 மணியளவில் Holy Cross Metric மேல்நிலைப் பள்ளியில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்ட அரங்கில் கல்வி சாரா செயல்பாடுகள் – அரசு பள்ளிகளில் கலைத் திருவிழா போட்டிகள் 2023 – 2024 நடத்துதல் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட உள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட BEO, BRT மற்றும் அனைத்து அரசு / ஆதிதிராவிட நலம் / நகரவை உயர்நிலை /மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இக்கூட்டத்திற்கு வரும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கீழ்காணும் கூட்டப் பொருள் சார்ந்த விவரங்களை தவறாமல் கொண்டுவந்து ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

<u>**கூட்டப்பொருள்**</u>

1. நடந்து முடிந்த காலாண்டுத் தேர்வின் முடிவுகளை G–Sheetல் பதிவேற்றம் செய்வதுடன் அதன் Had Copy ஐ மாவட்ட கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க தெரிவித்திருந்தும் இதுநாள்வரையில் ஒப்படைக்காத பள்ளி தலைமை ஆசிரியர்கள் நாளை நடைபெறும் கூட்டத்தில் தவறாமல் ஒப்படைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
2. காலாண்டுத் தேர்வில் 10ஆம் வகுப்பு பொறுத்தவரையில் தமிழ், கணிதம் மற்றும் சமூக அறிவியல் விடைத்தாட்களை தங்கள் பள்ளியில் தேர்வு எழுதிய மாணவர்கள் தேர்ச்சி பெற்றவர்கள், பள்ளியின் பெயர் பள்ளியின் எண் ஆகியவற்றை ஒரு தாளில் குறிப்பிட்டு தனித்தனியாக கட்டு கட்டி ஒப்படைக்க வேண்டும்.

   மேலும் 12ஆம் வகுப்பு பொறுத்தவரையில் இயற்பியல், வேதியியல், கணிதம் மற்றும் தாவரவியல் ஆகிய பாடங்களின் விடைத்தாட்களை

மேற்கூறியது போன்று தனித் தனியாக கட்டு கட்டி ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மேற்கூறிய 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு விடைத்தாட்கள் ஒப்படைக்கும்போது அப்பாடத்திற்குரிய விடைக்குறிப்பு (Key Answer) ஒவ்வொரு விடைத்தாள் கட்டுடன் சேர்த்து ஒப்படைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. இதுவரையில் NMMS – தேர்விற்கு விண்ணப்பித்த மாணவர்களின் விவரம் அளித்தல் மற்றும் விண்ணப்பிக்கப்பட வேண்டிய மாணவர்களை வரும் 16ம் தேதிக்குள் NSP – Portal ல் பதிவேற்றம் செய்யவேண்டும்.
4. மாணவர் மனசு இதுவரையில் பெறப்பட்டுள்ள புகார்களின் எண்ணிக்கை மற்றும் பெறப்பட்ட புகார்களுக்கு எடுத்த நடவடிக்கையின் விவரம்.
5. பள்ளிகளில் 'விசாகா கமிட்டி' – தொடங்கப்பட்ட விவரம்
6. பள்ளிகளில் முதலுதவி பெட்டி (First Aid Kit) சார்ந்த விவரம்
7. பள்ளி அளவில் இக்கல்வியாண்டில் நடத்தப்பட்ட போட்டிகளின் விவரம்
8. PSTM சார்ந்த இதுவரையில் முடித்த / நிலுவையில் உள்ள விவரம்
9. மதிய உணவு ( Noon Meal) உண்ணும் குழந்தைகளின் ஆண் / பெண் விவரம்
10. பள்ளிகளில் மாணவிகளுக்கு Napkins – வருடத்திற்கு எத்தனை முறை வழங்கப்படுகிறது, எவ்வளவு வழங்கப்படுகிறது மற்றும் இதுவரையில் (செப்டம்பர் 30 வரை) மாணவிகளுக்கு வழங்கப்பட்ட விவரம்.
11. இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் விவரம்.